**சீடத்துவம்: தந்தையைப் போல் இரக்கம் உள்ளவர்களாக இருங்கள்**

**<u>ஜனவரி 2016: கடவுளின் இரக்கத்தை வெளிப்படுத்துவது</u>**

**இலக்கு: எனது சொல்லாலும் செயலாலும் கடவுளின் இரக்கத்தை வெளிப்படுத்துவது.**

**தொடக்கப் பாடல் : உன் புகழைப் பாடுவது**

உன் புகழைப் பாடுவது
என் வாழ்வின் இன்பமையா
உன் அருளைப் போற்றுவது
என் வாழ்வின் செல்வமையா 2

1. துன்பத்திலும் இன்பத்திலும் நல்
தந்தையாய் நீயிருப்பாய்
கண்ணயரக் காத்திருக்கும் நல்
அன்னையாய் அருகிருப்பாய் 2
அன்பு எனும் அமுதத்தினை நான்
அரிந்திட எனக்களிப்பாய்
உன் நின்று பிரியாமல் நீ
என்றும் அணைத்திருப்பாய்
நீ என்றும் அணைத்திருப்பாய்

2. பல்லுயிரைப் படைத்திருப்பாய் நீ
என்னை ஏன் படைத்தாய்
பாவத்திலே வாழ்ந்திருந்தும் நீ
என்னை ஏன் அழைத்தாய் 2
அன்பினுக்கு அடைக்கும்தாள் ஒன்று
இல்லை என்றுணர்ந்தேன்
உன் அன்பை மறவாமல் நான்
என்றும் வாழ்ந்திடுவேன்
நான் என்றும் வாழ்ந்திடுவேன்

**தொடக்கச் செபம் -** அதிச உறுப்பினர்களில் ஒருவரை தொடக்கச் செபம் செய்ய அழைத்தல்

**<u>வாழ்வை நோக்குதல்</u>**

**பிச்சைக்காரரும் திருத்தந்தை இரண்டாம் ஜோன் பவுலும்**
நியு யோர்க்கைச் சேர்ந்து குருவானவர் ஒருவர் திருத்தந்தை இரண்டாம் ஜோன் பவுலைச் சந்திப்பதற்காக ரோம் சென்றிருந்தார். ரோம்மில், திருத்தந்தையைச் சந்திக்கும் முன் செபம் செய்ய ஆலயம் செல்ல முடிவு செய்தார். வாசற்படியில் நடந்து செல்லும் போது, படியில் ஒரு பிச்சைக்காரர் உட்கார்ந்திருப்பதைக் கண்டார். பிச்சைக்காரர்கள் அங்கு இருப்பது ஒன்றும் புதிதல்ல என்றாலும், அந்த குறிப்பிட்ட பிச்சைக்காரரிடம் ஏதோ ஒன்று அவர் மனதில் பட்டது. செபம் செய்து திரும்பும் போது அந்த பிச்சைக்காரிடம் பேச தீர்மானித்தார். அப்போது ஒருவரையொருவர் அடையாளம் கண்டு, இருவரும் ஒரே சமயத்தில் குரு மடத்தில் இருந்ததை உணர்ந்தனர். தான் குருவானவராக இருந்ததையும் பின்னர் தமது அழைத்தலுக்கேற்ப வாழாமல் வீணாகி போனதை அந்த பிச்சைக்காரர் விவரித்தார். பின்னர் அந்த குருவானவர் திருத்தந்தையை காண்பதற்கு வரிசையில் நின்றார். அவரது முறை வந்த போது, தெய்வீகத் தூண்டுதலுக்கு ஆள்பட்டு, திருத்தந்தையின் காலில் விழுந்து அந்த பிச்சைக்காரருக்காக செபிக்கும்படி கேட்டுக் கொண்டார். அந்த பிச்சைக்காரர் குருவானவராக இருந்ததையும் காலத்தின் கோலத்தால் வழி தடுமாறியதையும் எடுத்துச் சொன்னார்.

அன்று இரவு விருந்துக்கும் அந்த பிச்சைக்காரரையும் அழைத்து வரும்படி திருத்தந்தை அந்த குருவானவரை கேட்டுக் கொண்டார். ஜோன் பவுல் அழைப்பு விடுத்திருக்கும் செய்தியை அந்த பிச்சைக்காரரிடம் அவர் தெரிவித்தார். அந்த விருந்துக்கு தம்மால் வர முடியாது என்று அந்த பிச்சைக்காரர் கூறி தட்டிக்கழித்தார். ஆனால் அவர் இல்லாமல் விருந்துக்கு தாம் செல்லப் போவதில்லை என அந்த குருவானவர் உறுதியாக கூறினார். தமது ஹோட்டல் அறைக்கு அழைத்துச் சென்று, சவரம் செய்து தமது உடையைக் கொடுத்து அணிந்து கொள்ளச் செய்தார்.
அந்த இருவரும் திருத்தந்தை இருப்பிடத்திற்கு, திருத்தந்தையுடன் அமர்ந்து இரவு விருந்து உண்டனர். அந்த அறையை விட்டு சென்ற பின்னர் அந்த இரவில் என்ன நடந்தது என்பதை அந்த குருவானவர் பின்னர்தான் அறிந்து கொண்டார்.
திருத்தந்தை அந்த பிச்சைக்காரரைப் பார்த்து, "உன்னிடம் நான் பாவசங்கீர்த்தனம் செய்ய முடியுமா?" என கேட்டார். "ஆனால் நான் இப்போது குருவானவர் இல்லையே!" என அந்த பிச்சைக்காரர் பதில் அளித்தார். திருத்தந்தை அவரிடம் கூறினார், "ஒரு முறை குருவானவராகி விட்டால், நீ எப்போதும் குருவானவர்தான்". திருச்சபை முன்னிலையில் நான் ஒதுக்கப்பட்டவன், சபிக்கப்பட்டவன் என அந்த பிச்சைக்காரர் மன்றாடினார். திருத்தந்தை கூறினார், "நான் ரோம் ஆயர், இப்போதே நான் உன்னை மறுநியமனம் செய்ய முடியும்". அவ்வாறே செய்தார்.
பின்னர் திருத்தந்தை அந்த பிச்சைக்காரர் முன் முழங்காலிட்டு தமது பாவங்களை ஒப்புவித்தார். பாவங்சங்கீர்த்தனத்தின் இறுதியில் பாவத்தின் தீர்வை வழங்கும் செபத்தைச் சொல்ல அந்த பிச்சைக்காரரின் நா தழ தழத்தது. சற்றும் தாமதியாமல் முழங்காலிட்டு, கண்ணீர் மல்க, தமது பாவத்தைக் கேட்கும்படி திருத்தந்தையைக் கேட்டுக் கொண்டார். அந்த பிச்சைக்கார குருவானர் மீண்டும் அருள் நிலைக்கு திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர், அந்த மற்றொரு குருவானவரை அறைக்கு வரும் திருத்தந்தை அழைத்தார். எந்த ஆலயத்தில் தமது நண்பரை கண்டார் என அந்த குருவானவரிடம் திருத்தந்தை கேட்டு அறிந்து கொண்டார். "உமது முதல் மேய்ப்புப்பணியாக அதே ஆலயத்திற்கு துணைக் குருவாக அனுப்புகிறேன், தெருவில் இருக்கும் உமது சக பிச்சைக்காரர்களிடம் தொடர், பணி செய்ய உம்மை நியமிக்கிறேன்" என திருத்தந்தை கூறினார். இது நாள் வரை அந்த பிச்சைக்கார குருவானவர் அங்கேயே பணி செய்து, கைவிடப்பட்டோர்க்கு உதவி வந்தார்.

**<u>பகிர்ந்து கொள்வதற்கான கேள்வி</u>**

இந்த கதையில் கடவுளின் இரக்கம் வெளிப்படுவதை நீங்கள் எங்கே காண்கின்றீர்கள்?

**<u>இறைவார்த்தை</u>** (எபேசியர் 2:4-10)

ஆனால் கடவுள் மிகுந்த இரக்கம் உடையவர். அவர் நம்மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளார். குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நாம் அவ்வன்பின் மூலம் இணைந்து உயிர் பெறச் செய்தார். நீங்கள் மீட்கப்பட்டிருப்பது அந்த அருளாலேயே. இயேசு கிறிஸ்துவோடு இணைந்த நிலையில் நாம் அவரோடு உயிர்த்தெழவும் விண்ணுலகில் அவரோடு அமரவும் செய்தார். கிறிஸ்து இயேசு வழியாகக் கடவுள் நமக்குச் செய்த நன்மையையும் அவரது ஒப்புயர்வற்ற அருள் வளத்தையும் இனிவரும் காலங்களிலும் எடுத்துக் காட்டுவதற்காகவே இவ்வாறு செய்தார். நீங்கள் அந்த அருளாலேயே நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கிறீர்கள். இது உங்கள் செயல் அல்ல; மாறாக கடவுளின் கொடை. இது மனிதச் செயல்களால் ஆனது அல்ல. எனவே எவரும் பெருமை பாராட்ட இயலாது. ஏனெனில் நாம் கடவுளின் கைவேலைப்பாடு நற்செயல்கள் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாய்ப் படைக்கப்பட்டிருக்கிறோம். இவ்வாறு நற்செயல்கள் புரிந்து வாழும்படி கடவுள் முன்கூட்டியே ஏற்பாடு செய்திருக்கிறார்.

**சிந்தனை:**

- இந்த வாசகத்தில் உள்ளத்தைத் தொட்ட வார்த்தைகள் அல்லது வசனத்தை எடுத்துக் கொள்ளவும். பக்தியோடு இடைவெளி விட்டு, மௌனமாக 2 நிமிடத்திற்கு சொல்லவும்.
- உங்களைத் தொட்ட வார்த்தைகள் அல்லது வசனத்தை பிறரோடு பகிர்ந்து கொள்ளவும்.

**அன்பில் வாழ்தல்**

உங்கள் அதிச கூட்டத்தில் அறவே அல்லது எப்போதாவது ஒருமுறை கலந்து கொள்ளும் ஒரு குடும்பத்தை அடையாளம் கண்டு, இன்றைய அதிச கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு பெரியவர்கள் அந்த குடும்பத்திற்காக செபம் செய்ய அழைக்கப்படுகின்றனர். மூன்று நாள்களுக்கு அந்த குடும்பத்தின் நலனுக்காக செபியுங்கள். பின்னர் முடிந்தால் அந்த குடும்பத்தை நேரடியாக சென்று கண்டு, நட்புறவாடுங்கள்.

**இறுதிச் செபம் -** மற்றொரு அதிச உறுப்பினரை இறுதிச் செபம் செய்ய அழைத்தல்.

**இறுதிப் பாடல் : தலைவா உனை வணங்க**

தலைவா உனை வணங்க - என்
தலைமேல் கரம் குவித்தேன்
வரமே உனை கேட்க - நான்
சிரமே தாள் பணிந்தேன் 2

1. அகல்போல் எரியும் அன்பு - அது
பகல்போல் மணம் பரவும் 2
நிலையாய் உனை நினைத்தால்
நான் மலையாய் உயர்வடைவேன் 2

2. நீர்போல் தூய்மையையும் - என்
நினைவில் ஓடச் செய்யும் 2
சேற்றினில் நான் விழுந்தால் - என்னை
சீக்கிரம் தூக்கி விடும் 2

3. ஞானத்தில் சிறந்து என்ன - உயர்
தானத்தில் இருந்து என்ன 2
தாழ்மையில் மனம் இல்லையோ - என்
ஏழ்மையை என் சொல்வேன் 2